# சிவகங்கையில் - அரசின் பல்வேறு திட்டப் பணிகளை - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்த காட்சிகள்!




சிவகங்கை மாவட்டத்தில் 'முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்' , மாவட்ட ஆய்வுக்கூட்டம், 'கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்' வழங்கும் விழா மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்த போது, வழியெங்கும் திரண்டு வந்து உற்சாக வரவேற்பினை அளித்த கழகத்தினர் – இளைஞர் அணித் தம்பிமார்கள் – பொதுமக்கள் அனைவருக்கும் தமது அன்பையும், நன்றியையும் அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.09.2024) சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஆர். தமிழரசி, எஸ். மாங்குடி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விடுதலைப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். வாளுக்கு வேலி அம்பலத்தின் புகழ் மேலும் பரவிடும் வகையில், அவருக்கு திருவுருவச்சிலை யுடன் கூடிய மண்டபம் அமைக்கப்படும் என்றும் கழக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. காளையார்கோவில் அருகேயுள்ள நகரம்பட்டி கிராமத்தில் நடைபெற்று வரும் அப்பணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய்தார். வாளுக்கு வேலி அம்பலத்தின் திருவுருவச்சிலைக்கான கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திட அதிகாரிகள் அலுவலர்களை அறிவுறுத்தினார்.




காரைக்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா – மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கும் நிகழ்ச்சியின் போது, மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்தவர்கள், அவர்கள் உருவாக்கிய படைப்புகள் – உற்பத்தி பொருட்களைக் கொண்ட அரங்குகளை அமைத்து இருந்தனர். அந்த அரங்குகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்று, சுய உதவிக்குழுக்கள் தயாரித்த பொருட்களின் பயன்பாட்டினைக் கேட்டறிந்தார். அவர்களின் பணி சிறக்க வாழ்த்தினார்!



அரசுத் துறையில் ஆய்வுகளே நல்ல தீர்வுகளுக்கு வழிவகுக்கும் என்பதன் அடிப்படையில் மாவட்டம் வாரியாக தொடர்ந்து, விரிவான ஆய்வுக் கூட்டங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார். அந்த வகையில் சிவகங்கை மாவட்டத்தில் சென்றாண்டு ஆய்வுக்கூட்டம் நடத்திய நிலையில், மீண்டும் அனைத்து துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்தினார். அப்போது, மாவட்டத்தின் உட்கட்டமைப்பு சார்ந்து நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்தும், நம்முடைய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் எந்த அளவுக்கு பயனாளிகளை சென்று சேர்ந்துள்ளது என்பதற்கான தரவுகள் குறித்தும் உரிய ஆவணங்கள் வழியாக ஆய்வு செய்தார். அவை சார்ந்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அரசு அலுவலர்கள் உரிய பதில்களை தெரிவித்தனர். மேலும் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் பயனாளிகளுடன் செல்போன் மூலம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துகள் பெறப்பட்டது. எந்தவொரு திட்டமும் தங்குதடையின்றி மக்களுக்கு சென்றுசேர உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க அனைத்து அதிகாரிகள் – அலுவலர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்.




"முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டை முன்னிட்டு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகத்தை இளைஞர் அணி சார்பில் திறக்க வேண்டும்" என்ற கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்களின் உத்தரவை ஏற்று, திசையெங்கும் கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு வருவதை காண்கிறோம்! அந்த வகையில், இளைஞர் அணி சார்பில், சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக்கான நூலகத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் திறந்து வைத்தார். "பேசியும் – எழுதியும் வளர்ந்த நம் திராவிட இயக்கத்தின் வழியே வாசிப்புக்கு முக்கியத்துவம் அளித்து, திறந்து வைக்கப்பட்டுள்ள இந்நூலகம், எல்லோருடைய அறிவுத்தேடலுக்கும் துணை நிற்கட்டும். வாழ்த்துகள்!" என, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (10.09.2024) காரைக்குடியில் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 874 ஊராட்சிகளுக்கு 997 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர் பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர் எஸ். ராஜகண்ணப்பன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா காரைக்குடி மேயர் எஸ். முத்துதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். மாங்குடி, எஸ். முருகேசன், திருமதி. ஆர். தமிழரசி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, சர்வதேச செஸ் விளையாட்டு வீரர் பிரனேஷ், சர்வதேச டென்னிஸ் விளையாட்டு வீரர் நந்தகிஷோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், சிவகங்கை மாவட்டம் சிறாவயலில் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் 'காந்தி – ஜீவா' நினைவு அரங்கத்திற்கான கட்டுமானப் பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். இது தொடர்பான பதிவில் அமைச்சர் அவர்கள், " மகாத்மா காந்தி அவர்களும் – பொதுவுடைமை இயக்கத் தலைவர் தோழர் ப.ஜீவானந்தம் அவர்களும் சந்தித்த சிறாவயலில், காந்தி – ஜீவா நினைவு அரங்கத்தை விரைவில் கட்டி முடித்திட அதிகாரிகள் – அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.